**OS.NO. 83/2011 DW-1**

நாள் : 17.03.2025

பெயர் : ராணி

க/பெ : லேட் பாபு

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

இவ்வழக்கின் வாதி சந்திராயனை உங்களுக்கு தெரியும் என்றால் ஆமாம். அவர் ஆசிரியராக பணி செய்து பிறகு ஓய்வு பெற்றவர் என்றால் ஆமாம். உங்களுக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தமிழ் எழுத படிக்க தெரியும். நீங்கள் பணி செய்து வருகிறீர்கள் என்றால் நான் பள்ளி வாகனத்தில் நடத்துனராக இருந்து வருகிறேன். வாதி சந்திராயன் என்ன நிவாரணம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று தெரியுமா என்றால் தெரியும். அவர் வீட்டிற்கு என் வீடு வழியாக செல்ல பாதை கிடையாது ஆனால் பாதை இருப்பதாக சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளார். உங்கள் வீட்டிற்கு கிழக்கு பக்கமாக சந்து உள்ளதா என்றால் இல்லை சிவகாமி பாகத்தை தான் நான் கிரயம் பெற்றுள்ளேன் அவருக்கும் எனக்கு தான் பாகம் உள்ளது.

வாதியின் தகப்பனார் பால சுந்தரம் கிரயம் பெற்ற ஆவணத்தை பார்திருக்கிறீர்களா என்றால் ஆமாம். அந்த ஆவணத்தில் உங்கள் வீட்டிற்கு கிழக்கு பக்கமாக சந்து அமைந்துள்ளது என்றால் இல்லை நான் அந்த பத்திரத்தை படித்து பார்க்கவில்லை. உங்கள் வீட்டிற்கு வடக்கு பக்கத்தில் பொது சந்து உள்ளது என்றால் இல்லை. அந்த பொது சந்தும் வாதியின் தகப்பனார் பாலசுந்தரம் கிரயம் பெற்ற ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நீங்கள் சொல்வது தவறு ஆந்த ஆவணத்தில் பொது சந்து பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது நீங்கள் தவறாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. உங்கள் சொத்தின் கிழக்கு பகத்தில் சந்து உள்ளது அந்த

சந்தில் தான் கழிவு நீர் தொட்டியும், கேட்டும் கட்டியுள்ளீர்கள் என்றால் இல்லை என் சொத்தில் தான் கட்டியுள்ளேன். கிழக்கு பக்கம் இருக்க கூடிய சந்து எனக்கும் சிவகாமி அம்மாளுக்கும் மட்டுமே பாத்தியப்பட்ட சந்தாகும். உங்கள் வீட்டிற்கு கிழக்கு பக்கம் உள்ள சந்தில் 4 பேருக்கு 1/4 பாகம் உள்ளது அந்த விவரம் உங்கள் கிரய பத்திரத்திமான வா.சா.ஆ.10 ல் காணப்படுகிறது என்றால் அது தவறு. நீங்கள் சொல்வது தவறு வ.சா.ஆ.10 ஆவணத்தில் உங்கள் சொத்திற்கு கிழக்கு பக்கம் காணப்படும் சந்தில் 4 பேருக்கும் ஒரு பகுதி பங்கு உள்ளது என்றால் இல்லை எனக்கும் சிவகாமி அம்மாளுக்கும் தான் உள்ளது ஆவணத்தில் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த சந்தில் சந்திராயன், ராஜேந்திரேன், சிவகாமி மற்றும் உங்களுக்கும் உரிமை உள்ளது என்றால் அது தவறு. வ.சா.2 தன்னுடைய சாட்சியத்தில் உங்கள் சொத்திற்கு கிழக்கு பக்கம் உள்ள சந்து பொது சந்து என்று தான் குறிப்பிட்டுள்ளார் என்றால் அது தவறு. உண்மையாகவே நீங்கள் அந்த சந்தின் உரிமையாளர் என்றால் அந்த இடத்திற்கு நீங்கள் பட்டா பெற்றிருப்பீர்கள் என்றால் இல்லை. அந்த இடம் எனக்கும் சிவகாமி அம்மாளுக்கும் சொந்தம் அவருடைய ஒரு பாகத்தை தான் நான் கிரயம் பெற்றேன் எனவே எனக்கும் அவருக்கும் தான் அந்த சந்து உரியைமானதாகும். அந்த பொது சந்து இதற்கு முன்பாக மாடுகள், வண்டி போன்றவை செல்வதற்காக பயன்படுத்தப்படப்டது அந்த சந்தை உங்கள் வசமாக்கி பாதையை தடுத்துவிட்டிர்கள் என்றால் சரியல்ல. சந்தை நீங்கள் மறித்த காரணத்தால் தான் அவருக்கு சொந்தமான மாடுகளை கூட அவர் விற்றுவிட்டார் என்றால் சரியல்ல.

மேற்சொன்ன சந்து காணப்படும் காரணத்தால் தான் அந்த ஆவணத்தை நீங்கள் தாக்கல் செய்யவில்லை வாதி உங்கள் ஆவணத்தை செய்துள்ளார் என்றால் இல்லை நான் என் தரப்பு ஆவணத்தை தாக்கல்

செய்துள்ளேன். நீங்கள் சொல்வது தவறு நீங்கள் உங்கள் ஆவணத்தை முன்னிலைப்படுத்தவில்லை என்றால் அது தவறு. உங்களுக்கு பாதகமாக இருக்கிறது என்ற காரணத்தினாலேயே நீங்கள் கிரய ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் வாதி தரப்பில் என் ஆவணம் தாக்கல் செய்யப்பட்ட காரணத்தால் நான் என் கிரய ஆவணத்தை முன்னிலைப்படுத்தவில்லை.

இரு தரப்பிலும் சந்து தொடர்பாக பிரச்சனை ஏற்பட்டு ஆற்காடு கிராமிய காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் இரு தரப்பினரும் கொடுத்துள்ளோம். சர்வேயருக்கு மனு செய்து இடத்தை நான் அளந்தும் பார்த்தேன் அதில் எனக்கு சாதகமாக தான் சொன்னார்கள். இந்த வழக்கில் உங்களுக்கு ஆதரவாக கொடுக்கப்பட்ட சர்வேயர் வழங்கிய ஆவணத்தை தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள் வரைபடமும், ஆவணங்களும் நிலைக்கத்தக்கது தான் என்றால் அது சரியல்ல. உங்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பி.வா.சா.ஆ.1 ஆவணம் நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த ஆவணம் உங்கள் கையெழுத்து இல்லாத காரணத்தால் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

கிழக்கு பக்கம் இருக்க கூடிய சந்தில் நீங்கள் கட்டிடம் எதுவும் கட்டியுள்ளீர்களா என்றால் இல்லை. கிழக்கு பக்கத்தில் கேட் அமைத்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. வ.சா.ஆ.9 புகைப்படத்தில் காணப்படும் சுவர் நீங்கள் சந்தை ஆக்கிரமித்து கட்டியது தெரியவருகிறது என்றால் அது என்னுடைய சொத்தில் தான் கட்டியுள்ளேன் நான் எந்த சந்தையும் ஆக்கிரமிப்பு செய்யவில்லை. வாதியின் அனுபவத்தை தடுக்கும் நோகத்துடன் தான் கிழக்கு பக்கம் உள்ள சந்தை நீங்கள் ஆக்கிரமித்துள்ளீர்கள் என்றால் அது தவறு. வாதியின் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு நிலைக்கத்தக்கது தான் என்றால் சரியல்ல.

Typewritten to my dictation in open Court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

NAVEEN DURAIBABU
Digitally signed by NAVEEN DURAIBABU

District Munsif cum Judicial Magistrate,

Ranipet.